அரசினர் பொறியியற் கல்லூரி,
பர்கூர் – 635 104.

<u>சுற்றறிக்கை எண். 949 / நி4 / 2026</u> <u>நாள். 26.02.2026</u>

பொருள்: சிற்றுண்டிச்சாலை - அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் - சிற்றுண்டிச்சாலை ஒப்பந்த அடிப்படையில் நடத்த விண்ணப்பங்கள் வரவேற்பது - குறித்து.

*******

இக்கல்லூரியில் சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் 01.04.2026 முதல் 28.02.2027 முடிய 11 மாத காலத்திற்கு நடத்துவதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்த விருப்பம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சிற்றுண்டிச்சாலையினை நடத்த விண்ணப்பிக்கும் நபர்கள் அவர்களின் பெயரில் உணவு தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் (FSSAI Certificate) கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சிற்றுண்டிச்சாலையினை நடத்த விண்ணப்பிக்கும் நிலையில் உணவுத் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் (FSSAI Certificate) அக்குழுவின் பெயரில் இருக்க வேண்டும் தனிநபர்களின் பெயர்களில் இருக்கக்கூடாது.

மேலும் சிற்றுண்டிச்சாலையை பள்ளி / கல்லூரி ஏதேனுமொன்றில் நடத்தி முன் அனுபவம் பெற்றவருக்கும், தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண். 006596/ஜ1/2022, நாள்: 07.03.2022 – ன் படி SHG Group மற்றும் மூன்றாம் பாலினத்தருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட வேண்டிய உணவுப்பொருட்கள் அட்டவணை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் காணும் பொருட்களின் விலையை குறிப்பிட்டு விலைப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு சிற்றுண்டிச்சாலையை நடத்த விரும்புபவர்கள் தங்களது விலைப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையின் மேல் " சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டு முதல்வர், அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் – 635 104 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 20.03.2026 அன்று மாலை 4:00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். பெறப்படும் விலைப்புள்ளிகள் அனைத்தும் 23.03.2026 அன்று காலை 11:00 மணிக்கு திறக்கப்படும்.

குறித்த தேதி மற்றும் நேரத்திற்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்படுகிறது.

ஒம்/-முனைவர். வ. திருநாவுக்கரசு,
முதல்வர் (மு.கூ.பொ).

இணைப்பு:

1. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.
2. உணவுப்பொருட்களின் அட்டவணை

முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசினர் பொறியியற் கல்லூரி
பருகூர்-635 104.
த.பி.பா

பெறுநர்:

அறிவிப்பு பலகை மூலம்

கல்லூரி வளாகம் / அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,பர்கூர் - 635 104

அரசினர் பல்தொழில் நுட்பக் கல்லூரி, கிருஷ்ணகிரி - 635 001

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கெலமங்கலம் - 635 113.

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, ஊத்தங்கரை - 635 207.

அரசினர் ஆண்கள் மற்றும் மகளிர் கலைக்கல்லூரி,

கிருஷ்ணகிரி - 635 001

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி - 635 115.

வட்டாசிரியர் அலுவலகம், பர்கூர்- 635 001

அறிவிப்பு பலகை மூலம் காட்சிபடுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்:

கல்லூரி இணையதள பொறுப்பாசிரியர்.

(கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது).

சிற்றுண்டிச்சாலை ஒப்பந்ததாரர் நியமனம் தொடர்பான குழு தலைவர்

மற்றும் உறுப்பினர்களிடையே சுற்றுக்கு.

<u>நிபந்தனைகள்</u>

<u>சிற்றுண்டிச்சாலை கீழ்க்காணும்படி செயல்பட வேண்டும்:-</u>

1. சிற்றுண்டிச்சாலையினை நடத்த விண்ணப்பிக்கும் நபர்கள் அவர்களின் பெயரில் உணவு தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் (FSSAI Certificate) கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.
2. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சிற்றுண்டிச்சாலையினை நடத்த விண்ணப்பிக்கும் நிலையில் உணவுத் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் (FSSAI Certificate) அக்குழுவின் பெயரில் இருக்க வேண்டும் தனிநபர்களின் பெயர்களில் இருக்கக்கூடாது.
3. சிற்றுண்டிச் சாலையில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும், பொருட்களின் விலை, ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.
4. சிற்றுண்டிச் சாலை உள்ளே மற்றும் வெளியே எப்பொழுதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
5. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. சிற்றுண்டிச்சாலை கண்காணிப்பு குழுவினர் அவ்வப்போது சிற்றுண்டிச்சாலையை பார்வையிட்டு அளிக்கும் அறிவுரைகளை தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.
7. பயிலக வேலை நேரத்தில் வெளியாட்கள் யாரும் தங்களைப் பார்க்க / பொருட்கள் வாங்க பயிலக வளாகத்தின் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. தங்களால் மாணவ / மாணவிகளுக்கு மற்றும் பணியாளர்களுக்கு எவ்வித தொந்தரவோ, பாதிப்போ இருத்தல் கூடாது. இது போன்ற நிகழ்வுகள் உண்மை என அறியப்பட்டால் உடன் தங்களுக்கு சிற்றுண்டிச்சாலை நடத்த கொடுக்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.
9. பயிலகத்தில் தேர்வு நடைபெறும் நாட்களிலும், அத்தியாவசியமான நிலையில் அரசு விடுமுறை நாட்களிலும், தங்களால் சிற்றுண்டிச்சாலை நடத்தப்படுதல் வேண்டும்.
10. பொதுப்பணித்துறையால், நிர்ணயிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை வாடகைக் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 6322/- மற்றும் மின்சார கட்டணமாக ரூ. 500./- வீதம் அடுத்து வரும் மாதத்தின் 5ம் தேதிக்குள் பணமாக அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இந்த வாடகைத் தொகையானது பொதுப் பணித்துறையினால் மாற்றியமைக்கப்படும் பட்சத்தில் அத்தொகையை எவ்வித மறுப்பின்றி செலுத்தல் வேண்டும்.
11. சிற்றுண்டிச்சாலையை இக்கல்லூரியின் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் திறக்க வேண்டும். அவ்வாறு திறக்காமல் காலங்கடந்து திறப்பின் அதற்குரிய வாடகையினை இக்கல்லூரி வெளியிடும் செயல்முறை ஆணை வெளியிடும் நாளிலிருந்து வசூலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.
12. முன் வைப்புத் தொகையாக ரூ. 25,000/- முன்பணமாக செலுத்த வேண்டும். ஒப்பந்தக்காலம் முடிவுறும் பொழுது தாங்கள் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ஏதுமில்லாத பட்சத்தில் இத்தொகை முற்றிலும் தங்களுக்குத் திரும்பி வழங்கப்படும்.

13. பொருட்களின் விலைப்பட்டியல் அடங்கிய விவரங்களை கட்டாயம் சிற்றுண்டி பட்டியல் வைக்க வேண்டும்.
14. வேலை நாட்களில் காலை 7.00 மணி முதல் இரவு 9.30 வரையிலும் விடுமுறை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் செயல்பட வேண்டும்.
15. ரூ. 100/-க்கான அரசு முத்திரைத் தாளில் ஒப்பந்த பத்திரம் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
16. உணவுகளை தயாரிக்க கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் மற்றும் இதர மளிகை பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும்.
17. ஒப்பந்தாரரின் சொந்த செலவில் உணவு தயாரிக்க தேவைப்படும் சமையல் பாத்திரங்களை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
18. சிற்றுண்டிச்சாலையில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு (LPG) பாதுகாப்பான முறையில் பயன்படுத்த வேண்டும்.
19. சிற்றுண்டிச்சாலையினை சுத்தமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். பயன்படுத்தப்படும் சமையல் பாத்திரங்கள், தட்டுகள், டம்ளர்கள் ஆகியவற்றினை சுத்தமான நீரினால் கழுவி சுத்தம் செய்து பராமரிக்கப்பட வேண்டும்.
20. சிற்றுண்டிச்சாலைக்கு தேவையான பணியாளர்களை தங்கள் அளவில் நியமனம் செய்து கொள்ள வேண்டும்.
21. குழந்தைத் தொழிலாளர்களை எக்காரணம் கொண்டும் பணியில் அமர்த்தக் கூடாது.
22. சிற்றுண்டிச்சாலையில் சமைத்த உணவுகளை இக்கல்லூரியினை தவிர்த்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது.
23. புகை, மது மற்றும் போதை பொருட்களை சிற்றுண்டிச்சாலையில் பயன்படுத்தக்கூடாது.
24. சிற்றுண்டிச்சாலையில் உள்ள அரசு தளவாடங்களுக்கு மற்றும் பொருட்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.
25. ஓராண்டு காலத்திற்கு தங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால் தொடர்ந்து தங்களுக்கு ஒப்பந்தம் வழங்க எவ்வித உரிமையும் கோர இயலாது.
26. ஒப்பந்தம் குறித்து முதல்வரின் முடிவே இறுதியானது.ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவோ, மாற்றவோமுதல்வருக்கு முழு உரிமை அதிகாரம் உண்டு
27. உணவு தரக்கட்டுப்பாட்டு சான்று (FSSAI Certificate) சமர்பித்த பின்னரே உணவு விடுதி நடத்திட அனுமதி வழங்கப்படும்.

26/2/26

முதல்வர்(மு.கூ.பொ)க்காக.

2/3

26/02/26

# அட்டவணை

**(விலை விவரம் விண்ணப்பத்தாரால் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்)**

| வ. எண் | பொருட்களின் விவரம் | விலை விவரம் ரூ. · பை |
|---|---|---|
| 1 | டீ / காபி / பால் 120 மில்லி | |
| 2 | டீ / காபி / பால் (Special) 120 மில்லி | |
| 3 | பார்சல் டீ / காபி / பால் 200 மில்லி | |
| 4 | பருப்பு வடை / உளுந்து வடை/சமோசா (30கி) | |
| 5 | உருளைக்கிழங்கு போண்டா / பஜ்ஜி கீரை வடை / தவளைவடை (30கி) | |
| 6 | சோளா பூரி (100 கி) | |
| 7 | மிக்சர் (40 கிராம்) பொட்டலம் | |
| 8 | இட்லி 1க்கு (சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 9 | தோசை (சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 10 | பூரி செட் (கிழங்குடன்) | |
| 11 | பொங்கல் 250 கிராம் அளவுடன் (சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 12 | புரோட்டா 1க்கு (குருமாவுடன்) | |
| 13 | அளவு சாப்பாடு அதனுடன் சாம்பார், வத்த குழம்பு, ரசம், மோர், பொரியல், அப்பளம் (அரிசி சாதம் 300 கிராம்) | |
| 14 | தயிர்(50 மில்லி) | |
| 15 | **கலவை சாதம்** - எலுமிச்சை / தயிர் / தக்காளி சாதம் 250 கிராம் அளவுடன் | |
| 16 | வெஜிடபிள் பிரியாணி (250 கிராம்) | |
| 17 | Fresh Juice லெமன்,ஆப்பிள்,மாதுளை,சாத்துக்குடி | |
| 18 | ஸ்வீட் / கேக் வகைகள் | |
| 19 | கூல்டிரிங்ஸ் | |
| 20 | பிஸ்கட் | |

26/2/26

முதல்வர்(மு.கூ.பொ)க்காக.

3/3

26/02/26